IJCRT.ORG ISSN : 2320-2882

INTERNATIONAL JOURNAL OF CREATIVE RESEARCH THOUGHTS (IJCRT)

An International Open Access, Peer-reviewed, Refereed Journal

# Editions Of Bharathiyar's Nattupattu: A Historical Perspective

## வரலாற்று நோக்கில் பாரதியாரின் நாட்டுப்பாட்டுப் பதிப்புக்கள்

Dr. A. MANI, Assistant Professor of Tamil, Bharathidasan Government College for Women, Puducherry - 605 003, https://orcid.org/0009-0000-9256-6420.

முனைவர் ஆ. மணி, துணைப்பேராசிரியர் - தமிழ், பாரதிதாசன் அரசினர் மகளிர் கல்லூரி, புதுச்சேரி - 605 003, பேச: 94439 2714.

**Synopsis**

Among the works of the Mahakavi Bharathiyar, the collection *Nattupattu* holds the distinction of being the only book to undergo three editions during his own lifetime. First published in 1917 by Parali Su. Nellaiyappar—during Bharathiyar's residence in Puducherry — *Nattupattu* earned the unique distinction of seeing three editions released by 1920. The objective of this study is to introduce these editions. Framed within a historical approach, this article stands as the first scholarly piece in Tamil to address this specific subject. To elucidate the similarities and differences evident across these three editions, the first three published versions of *Nattupattu* have been utilized as primary source materials for this article.

**Key words:** Mahakavi Bharathiyar, Nattupattu, Parali Su. Nellaiyappar, historical approach.

**ஆய்வுச் சுருக்கம்**

மகாகவி பாரதியாரின் நூல்களில், அவர் வாழ்ந்த காலத்திலேயே மூன்று பதிப்புக்களைக் கண்ட நூல் என்ற பெருமை நாட்டுப்பாட்டு நூலுக்கு உண்டு. பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில் 1917இல் முதல் பதிப்பாகப் பரலி சு. நெல்லையப்பரால் வெளியிடப்பட்ட நாட்டுப்பாட்டு 1920க்குள் மூன்று பதிப்புக்களைக் கண்டது என்ற பெருமையும் பெற்ற நூலாகும். அப்பதிப்புக்களை அறிமுகம் செய்வது இந்த ஆய்வின் நோக்கமாகும். வரலாற்று அணுகுமுறையில் அமைந்த இக்கட்டுரை, இப்பொருண்மையில் தமிழில் அமையும் முதல் கட்டுரையாகும். மூன்று பதிப்புக்களிலும் காணப்படும் ஒற்றுமை; வேற்றுமைகளை விளக்கும் இக்கட்டுரைக்கு நாட்டுப்பாட்டின் முதல் மூன்று பதிப்புக்களும் துணைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன.

குறிச்சொற்கள்: மகாகவி பாரதியார், நாட்டுப்பாட்டு, பரலி சு. நெல்லையப்பர், வரலாற்று அணுகுமுறை.

**உரைக்களம்**

மகாகவி பாரதியாரின் நாட்டுப்பாட்டு 1917இல் முதன்முறையாகப் பரலி சு. நெல்லையப்பரால் முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்டது. அதன் பின்னர் அது பரலி நெல்லையப்பராலேயே மூன்று முறை பதிப்பிக்கப்பட்டது. இக்கட்டுரை, அப்பதிப்புக்களை வரலாற்று நோக்கில் எடுத்துரைக்கின்றது. இம்முயற்சிக்கு நாட்டுப்பாட்டுப் பதிப்புக்களும், பதிப்புக்களைப் பற்றிய ஆய்வுகளும் துணைகளாகக் கொள்ளப்பட்டுள்ளன. நாட்டுப்பாட்டுப் பதிப்பினைக் குறித்துள்ள ஆய்வாளர்கள் பலரும் 1919ஆம் ஆண்டில் வந்த இரண்டாம் பதிப்பையே தம் ஆய்வுகளில் மேற்கோள் காட்டியுள்ளனர். முதல், மூன்றாம்

பதிப்புக்கள் இக்கட்டுரையாளராலேயே முதற்கண் கண்டு உரைக்கப்படுகின்றன என்பது அறியத்தக்கது.

**நாட்டுப்பாட்டு - பதிப்பு வரலாறு: முதல் பதிப்பு**

1915இல் பரலி சு. நெல்லையப்பருக்கு அனுப்பப்பட்ட மகாகவி பாரதியாரின் நாட்டுப்பாட்டுப் பாடல்கள் 1917 செப்டம்பரில் முதன்முறையாக அவரால் சென்னை, இந்தியா அச்சுக்கூடத்தில் முதன்முதலாகப் பதிப்பிக்கப்பட்டன. அக்காலத்தில் பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்து வந்தார். எட்டுப் பாடல்களை மட்டும் கொண்ட அப்பதிப்பு ஏறத்தாழ 22 பக்கங்கள் கொண்டதாகும். இப்பதிப்பின் முகவுரையில் பரலி சு. நெல்லையப்பர், “இந்த நூலுக்கு ஒரு பெரிய முகவுரை எழுத வேண்டியது அவசிய மில்லை.

இதன் ஆசிரியர் தெய்வம் கண்ட கவி. இவரைப் பற்றி எழுத வேண்டுமானால் இது போன்று பல புஸ்தகங்கள் வேண்டும். இதில் உள்ள பாடல்களில் சில முன் வெளியானவை” (பரலி சு. நெல்லையப்ப பிள்ளை 1917: ப.எ.இ.) என எழுதுகின்றார்.

நாட்டுப்பாட்டு பாடல்களின் முற்பதிப்பு / இதழ்களின் விவரம் (சீனி. விசுவநாதன் தொகுப்பின் அடிப்படையில்) வருமாறு:

| | நாட்டுப்பாட்டு முதல் பதிப்பு (1917) | | | |
|---|---|---|---|---|
| வ. எண் | பாடல் தலைப்பு / பாட்டுத் தொடக்கம் | நாட்டுப்பாட்டு நூல் - பாடல் குறிப்பு | முற்பதிப்பு விவரம் - இதழ் | முற்பதிப்பு விவரம் - நூல் |
| 1 | வந்தே மாதரம் / வந்தே மாதர மென்போம் | பாடலில் மூன்று சரணங்கள் மட்டுமே உள்ளது. | இந்தியா இதழ். 18.05.1907. பாடலில் 6 சரணங்கள் உள. | ஸ்வதேச கீதங்கள் (1907, 1908) பதிப்புக்கள். 1907 பதிப்பில் இந்தியா இதழில் வெளிவந்த 6ஆம் சரணம் மாற்றப்பட்டு, ‘தேவி நம் பாரத பூமி’ என்ற சரணம் தரப்பட்டுள்ளது. 1908 பதிப்பில் இந்தியா இதழ்ப் பாடலே உள்ளது. |
| 2 | நாட்டுப்பாட்டு - செந்தமிழ் நாடு / செந்தமிழ் நாடென்னு | 10 பகுதிகள் கொண்ட பாட்டு. | -?- | -- |
| 3 | பாரத தேசம் / பாரத தேசமென்று | பல்லவியுடன் சேர்த்து 14 பகுதிகள் கொண்ட பாட்டு. | -- | -- |
| 4 | நாட்டு வணக்கம் - சுதேச வந்தனம் / எந்தையும் தாயு | 3 பகுதிகள். | -- | ஸ்வதேச கீதங்கள் (1907, 1908) பதிப்புக்கள். |
| 5 | எங்கள் நாடு / மன்னு மிமய மலை | 3 பகுதிகள். | சுதேச மித்திரன் இத. 24.10.1905. 4 பகுதிகள் கொண்ட பாட்டு. | ஸ்வதேச கீதங்கள் (1907, 1908). முந்திய மாண்புகள் எனத் தொடங்கும் ஒரு பகுதி நீக்கப்பட்டு, 3 பகுதிகள் கொண்டதாக இப்பதிப்பில் உள்ளது. |
| 6 | ஜாதிய கீதம் 1 / ஸுஜலாம் ஸுபலம் | பல்லவியுடன் 6 பகுதிகள் கொண்ட பாட்டு. வங்க ம்ழிப் பாடலின் தமிழ் ஒலிபெயர்ப்பு வடிவம் | -- | -- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இப்பாடல். | | |
| 7 | ஜாதிய கீதம் 2 / இனிய நீர்ப்பெருக்கி னை | 7 பகுதிகள் கொண்ட பாட்டு. | சக்ரவர்த்தினி இதழ். 1905 நவம்பர். பாடற்பகுதி எண்கள் ரோமன் எண்களாக உள்ளன. 7 பகுதிகள். | -- |
| 8 | ஜாதிய கீதம் 3 / நளிர்மணி நீரும் | 6 பகுதிகள் கொண்ட பாட்டு. | இந்தியா இதழ் 13.03.1909. 6 பகுதிகள் கொண்ட பாட்டு. இது பின்னர்க் கர்மயோகி (1910 பிப்ரவரி) இதழிலும் வெளிவந்துள்ளது. | மாதா மணிவாசகம் (1914). |

நாட்டுப்பாட்டு முதல் பதிப்பில் (1917) இடம்பெற்ற 8 பாடல்களில் 4 பாடல்கள் முன்னைய நூல்களில் (ஜன்மபூமி, மாதா மணிவாசகம் முதலானவை) இடம்பெற்றவை. 2 பாடல்கள் இதழ்களில் இடம்பெற்றவை. 1 பாடல் (செந்தமிழ் நாடு பாடல்) 1915இல் வெளிவந்த பாரதி இதழில் இடம்பெற்றது என்ற கருத்துண்டு. அது உறுதிப்படுத்தப்பட வேண்டும். அப்படிப் பார்க்கும்பொழுது, கிடைத்துள்ள தரவுகளின்படி, 1 பாடல் (ஜாதிய கீதம் - 1) மட்டுமே நாட்டுப்பாட்டு முதல் பதிப்பில் (முன்னைய பதிப்புக்களிலோ, இதழ்களிலோ இடம்பெறாது, நாட்டுப்பாட்டு நூலில் மட்டுமே) இடம்பெற்ற பாடலாகத் தெரிகின்றது.

**நாட்டுப்பாட்டு - இரண்டாம் பதிப்பு**

பிரஞ்சு அரசின் கட்டுப்பாட்டில் இருந்த புதுச்சேரியில் இருந்து பிரிட்டீஷ் இந்தியப் பகுதிக்கு வர வேண்டும் என முயன்றபோது, 1918இல் பாரதியார் கடலூரில் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டார். பலருடைய உதவியால் சிறையிலிருந்து மீண்ட பின்னர் 1918 திசம்பரில் பரலி சு. நெல்லையப்பருக்குக் கடிதம் எழுதி, ‘நாட்டுப்பாட்டு இன்னும் சில நூல்களின் கைவசம் இருக்கும் படிகளை அனுப்ப வேண்டும் என்றும், படிகள் இல்லாவிட்டால் அச்சிட்டு அனுப்ப வேண்டும்’ என்றும் வேண்டுகோள் விடுக்கின்றார். அதன் பின்னர் 1919 ஜூன் - ஜூலையில் நாட்டுப்பாட்டின் இரண்டாம் பதிப்பு பரலி சு. நெல்லையப்பரால் வெளியிடப்படுகின்றது. அதன் முகவுரையில், “இது, முன்னர் யான் வெளியிட்ட நாட்டுப்பாட்டின் இரண்டாம் பதிப்பு. இதில் பல புதிய பாடல்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

பாரதியாரின் பாடல்களைப் பற்றிய சிறிய ஆராய்ச்சி எழுதுவதென்றாலும் அது பெரிதாக விரியும். எனவே, அந்தக் கடமையை இங்கு நான் செய்யவில்லை” (பரலி சு. நெல்லையப்ப பிள்ளை 1919: ப.எ.இ.). சித்தார்த்தி ஆண்டு ஆனி என ஆண்டு குறிக்கப்பட்டுள்ள இப்பதிப்பு, 19 பாடல்களைக் கொண்ட விரிவாக்கம் பெற்ற பதிப்பாக அமைந்துள்ளது குறிக்கத்தக்கது. இப்பதிப்பில் உள்ள பாடல்களின் விவரம் வருமாறு (முதல் பதிப்பில் தரப்பட்டுள்ளவை நீங்கலானவை மட்டும்):

| நாட்டுப்பாட்டு இரண்டாம் பதிப்பு (1919) | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | பாடல் தலைப்பு | பாட்டுத் தொடக்கம் | கண்ணி / பாடல் பகுதிகளின் எண்ணிக்கை | முற்பதிப்பு விவரம் - இதழ் | முற்பதிப்பு விவரம் - நூல் |
| 1. | வந்தே மாதரம் | வந்தே மாதரமென் போம் | பல்லவி 1, சரணம் 3 | மு.ப.பார்க்க | மு.ப.பார்க்க |
| 2. | வந்தே மாதரம்* | வந்தே மாதரம் | பல்லவி 1, சரணம் 4 | -- | -- |
| 3. | செந்தமிழ் நாடு | செந்தமிழ் நாடென்னு | 10 | -?- | நாட்டுப்பாட்டு முதல் பதிப்பு |
| 4. | பாரத தேசம் | பாரத தேசமென்று | 13 | -- | நாட்டுப்பாட்டு முதல் பதிப்பு. |
| 5. | நாட்டு வணக்கம் - சுதேச வந்தனம் | எந்தையும் தாயு | 3 | -- | மு.ப.பார்க்க |
| 6. | எங்கள் நாடு | மன்னும் இமய மலை | 3 | மு.ப.பார்க்க | மு.ப.பார்க்க |
| 7. | ஜாதிய கீதம் 1 | ஸுஜலாம் ஸுபலம் | 5 | -- | நாட்டுப்பாட்டு முதல் பதிப்பு |
| 8. | ஜாதிய கீதம் 2 | இனிய நீர்ப்பெருக்கினை | 7 | மு.ப.பார்க்க | நாட்டுப்பாட்டு முதல் பதிப்பு |
| 9. | ஜாதிய கீதம் 3 | நளிர்மணி நீரும் | 6 | மு.ப.பார்க்க | மு.ப.பார்க்க |
| 10. | எங்கள் தாய்* | தொன்று நிகழ்ந்த | 10 | இந்தியா இதழ். 07.11.1908. | ஜன்மபூமி (1908). |
| 11. | மாதாவின் துவஜம்* | தாயின் மணிக் கொடி | 1+10 | இந்தியா இதழ். 11.07.1908. | ஜன்மபூமி (1909). |
| 12. | பாரத தேவியின் திருத்தசாங்கம்* | பச்சை மணிக்கிளியே | 10 | இந்தியா இதழ். 10.10.1908. | ஜன்மபூமி (1909). நாட்டுப்பாட்டு இரண்டாம் பதிப்பு. |
| 13. | ஜய பாரத* | சிறந்து நின்ற | 4 | இந்தியா இதழ். 05.12.1908. | ஜன்மபூமி (1909). நாட்டுப்பாட்டு இரண்டாம் பதிப்பு. |
| 14. | சுதந்திர தேவியின் துதி* | இதந்தரு மனையி | 4 | -- | ஜன்மபூமி (1909). நாட்டுப்பாட்டு இரண்டாம் பதிப்பு. |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 15. | சுதந்தர தாகம்* | தண்ணீர் விட்டோ | கண்ணிகள் 12 | இந்தியா இதழ். 19.12.1908. | ஜன்மபூமி (1909). 15 கண்ணிகள் கொண்ட பாட்டு. நாட்டுப்பாட்டு இரண்டாம் பதிப்பு. |
| 16. | பாரதமாதா திருப்பள்ளி யெழுச்சி* | பொழுது புலர்ந்த து | 5 | கர்மயோகி இதழ். 1910 பிப்ரவரி. | மாதா மணிவாசகம் (1914). நாட்டுப்பாட்டு இரண்டாம் பதிப்பு. |
| 17. | தமிழ்* | யாமறிந் த மொழிக ளிலே | 4 | -- | நாட்டுப்பாட்டு இரண்டாம் பதிப்பு. |
| 18. | தமிழ்த்தாய் தன் மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுதல்* | ஆதிசிவ ன் பெற்று விட்டான் | 12 | -- | நாட்டுப்பாட்டு இரண்டாம் பதிப்பு. |
| 19. | புது வருஷம்* | வாழிய செந்தமி ழ் | 3 | இந்தியா இதழ். 20.04.1907; 16.10.1909. | ஸ்வதேச கீதங்கள் (1908). நாட்டுப்பாட்டு இரண்டாம் பதிப்பு. |

நாட்டுப்பாட்டு நூலின் முதல் பதிப்பில் இடம்பெறாது, இரண்டாம் பதிப்பில் (1919) சேர்க்கப்பட்ட பாடல்களின் தலைப்பில் * என்ற குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளன. அவ்வகையில் 11 பாடல்கள் முதல் பதிப்பில் இல்லாமல், இரண்டாம் பதிப்பில் சேர்க்கப்பட்டுள்ளன. இரண்டாம் பதிப்பில் மட்டுமே இடம்பெற்ற பாடல்களாக இரண்டு பாடல்களே மட்டுமே அமையக் காணலாம்.

**நாட்டுப்பாட்டு - மூன்றாம் பதிப்பு**

நாட்டுப்பாட்டு நூலின் மூன்றாம் பதிப்பு ரௌத்திரி, ஆடி எனப் பரலி சு. நல்லையப்பரின் முகவுரையில் ஆண்டும் மாதமும் குறிக்கப்பட்ட பதிப்பு, 1920 ஜூலை - ஆகஸ்ட்டு மாதத்தில் வெளிவந்தது. இரண்டாம் பதிப்பு வெளிவந்த ஓராண்டிலேயே (1919 ஜூலைக்குள் இரண்டாம் பதிப்பு வெளிவந்தது) மூன்றாம் பதிப்பும் வெளிவந்தது குறிக்கத்தக்கது. இப்பதிப்பும் ஆய்வாளர்களால் பெரிதும் அறியப்படாத ஒரு பதிப்பே. பாரதி வாழ்ந்த காலத்தில் வெளிவந்த நூல்களில் நாட்டுப்பாட்டே இவ்வாறு அடுத்தடுத்த ஆண்டுகளில் அடுத்தடுத்த பதிப்புக்களைக் கண்டுள்ளது பெரும் சிறப்பாகும். இவ்வுண்மைகளை ஆய்வுலகிற்குத் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி. இது நிற்க.

மூன்றாம் பதிப்பின் முகவுரையில் பரலி சு. நெல்லையப்பர், “இது யான் முன்னர் வெளியிட்ட நாட்டுப்பாட்டின் மூன்றாம் பதிப்பு. இதன் இரண்டாம் பதிப்பின் முகவுரையையே இதற்கும் முகவுரையாக அமைத்துள்ளேன்” (பரலி சு. நெல்லையப்ப பிள்ளை 1920: ப.எ.இ.).

முழுமையாகக் கிடைக்காத இப்பதிப்பில் உள்ள (கிடைத்த வரையிலான) பாடல்களின் விவரம் வருமாறு (முதலாம், இரண்டாம் பதிப்பில் தரப்பட்டுள்ளவை நீங்கலானவை மட்டும்):

| **நாட்டுப்பாட்டு மூன்றாம் பதிப்பு (1920)** | | | | | |
|---|---|---|---|---|---|
| வ. எண் | பாடல் தலைப்பு | பாட்டுத் தொடக்கம் | கண்ணி / பாடல் பகுதிகளின் எண்ணிக்கை | முற்பதிப்பு விவரம் - இதழ் | முற்பதிப்பு விவரம் - நூல் |
| 1 | வந்தே மாதரம் | வந்தே மாதர மென்போம் | பல்லவி 1, சரணம் 3 | | |
| 2 | வந்தே மாதரம் | வந்தே மாதரம் | பல்லவி 1, சரணம் 4 | | |
| 3 | செந்தமிழ் நாடு | செந்தமிழ் நாடென்னு | 10 | | |
| 4 | பாரத தேசம் | பாரத தேசமென்று | 13 | | |
| 5 | நாட்டு வணக்கம் - சுதேச வந்தனம் | எந்தையுன் தாயு | 3 | | |
| 6 | எங்கள் நாடு | மன்னு மிமய மலை | 3 | | |
| 7 | ஜாதிய கீதம் | ஸுஜலாம் ஸுபலம் | 5 | -- | நாட்டுப்பாட்டு முதல், இரண்டாம் பதிப்புக்கள். |
| 8 | ஜாதிய கீதம் 1 | இனிய நீர்ப்பெருக் கினை | 7 | | |
| 9 | ஜாதிய கீதம் 2 | நளிர்மணி நீரும் | 6 | | |
| 1 | எங்கள் தாய் | தொன்று நிகழ்ந்த | 10 | | |
| 1 | மாதாவின் துவஜம் | தாயின் மணிக்கொடி | 1+10 | | |
| 1 | பாரத தேவியின் திருத்த சாங்கம் | பச்சை மணிக்கிளியே | 10 | | |
| 1 | ஜய பாரத | சிறந்து நின்ற | 4 | | |
| 1 | சுதந்திர தேவியின் துதி | இதந்தரு மனையி | 4 | | |
| 1 | தமிழ்த் தாய் தன் | ஆதிசிவன் பெற்று | 12 | | 17 ஆவது பாட்டாக |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | மக்களைப் புதிய சாத்திரம் வேண்டுதல் | விட்டான் | பக்கங்கள் மாறியுள்ளன. | | இரண்டாம் பதிப்பில் உள்ளது. |
| 1 | ஸரஸ்வதி தேவியின் புகழ் | வெள்ளைத் தாமரைப் | 9 | | மாதாமணிவாசகம் (1914).<br>முதல், இரண்டாம் பதிப்புக்களில் இப்பாட்டு இல்லை. |
| 1 | சுதந்திர தாகம் | தண்ணீர் விட்டா வளர்த்தோம்? | 12 | | 14 ஆவது பாட்டாக இரண்டாம் பதிப்பில் உள்ளது. |
| 1 | பாரத மாத திருப்பள்ளியெழுச்சி | பொழுது புலந்தது | 5 | | 15 ஆவது பாட்டாக இரண்டாம் பதிப்பில் உள்ளது. |
| 1 | தமிழ் | யாமறிந்த மொழிகளிலே | முதல் பகுதிக்குப் பின்னைய பகுதியும், நூலின் பின்பகுதியும் கிடைக்கவில்லை. | | 16 ஆவது பாட்டாக இரண்டாம் பதிப்பில் உள்ளது. |

புது வருஷம் (வாழிய செந்தமிழ் வாழ்க நற்றமிழர்) என்னும் பாடல் 19 ஆம் பாடலாக உள்ளது. மூன்றாம் பதிப்பில் இப்பாடல் இருக்கிறதா? எனத் தெரியவில்லை (பதிப்பு முழுமையாகக் கிடைக்கவில்லை). பின்னைய பகுதியிலும் வேறு பாடல்கள் எவையும் உண்டா? என்பதும் தெரியவில்லை. இரண்டாம் பதிப்பின் பாடல்களின் வரிசைமுறை, மூன்றாம் பதிப்பில் மாறியுள்ளதைக் காணமுடிகின்றது. தற்போது தெரிந்தவரை, முதல் இரு பதிப்புக்களில் இல்லாத ஸரஸ்வதியின் புகழ் என்னும் தலைப்பிலான பாடல் மட்டுமே மூன்றாம் பதிப்பில் மட்டுமே உள்ள ஒரேயொரு பாடலாக இருக்கலாம். ஆனால் அப்பாடலும் மாதா மணிவாசகம் (1914) நூலில் உள்ள பாடலே என்பது குறிக்கத்தக்கது.

முடிப்புரை

பாரதியாரின் நாட்டுப்பாட்டு நூலே, அவர் வாழ்ந்த காலத்திலேயே மூன்று பதிப்புக்கள் கண்ட பெருஞ்சிறப்புடைய நூலாகும். இம்மூன்று பதிப்புக்களையும் பதிப்பித்த பெருமைக்குரியவர் பரலி சு. நெல்லையப்பர் ஆவார். முதல் பதிப்பில் 8 பாடல்களும், இரண்டாம் பதிப்பில் 19 பாடல்களும், முழுமையாகக் கிடைக்காத மூன்றாம் பதிப்பில் (கிடைத்த வரையில்) 19 பாடல்களும் இடம்பெற்றுள்ளதாகத் தெரிகிறது. முன்னரே இதழ்களிலோ, நூல்களிலோ வெளிவராத / அந்த நூலிலே மட்டும் புதிதாக இடம்பெற்ற பாடல் என்ற நிலையில் முதல் பதிப்பிலும், மூன்றாம் பதிப்பிலும் ஒரு பாடலும், இரண்டாம் பதிப்பில் இரு பாடல்களும் காணப்பெறுவது அறியத்தக்கது (வேறு தரவுகள் கிடைத்தால், இக்கருத்து மாற்றம் பெறவும் கூடும்).

**துணைநூல்கள்**

நெல்லையப்பன். பரலி. சு. (பதி.ஆ.). 16.08.1917 (முதல் பதிப்பு - பிங்கள, புரட்டாசி க - முன்னுரை வழி). நாட்டுப்பாட்டு. சென்னை: இந்தியா அச்சுக்கூடம்.

நெல்லையப்பன். பரலி. சு. (பதி.ஆ.). 1919 ஜூன் - ஜூலை (இரண்டாம் பதிப்பு - சித்தார்த்தி, ஆனி-முன்னுரை வழி). நாட்டுப்பாட்டு. சென்னை: இந்தியா அச்சுக்கூடம்.

நெல்லையப்பன். பரலி. சு. (பதி.ஆ.). 1920 ஜூலை - ஆகஸ்டு (மூன்றாம் பதிப்பு - ரௌத்திரி, ஆடி-முன்னுரை வழி). நாட்டுப்பாட்டு. ஊர்: அச்சகம் தெரியவில்லை.

பத்மநாபன். ரா.அ. 1957 (முதல் பதிப்பு). சித்திர பாரதி. சென்னை: அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட்.

விசுவநாதன். சீனி. (தொகு.ஆ.). 1989 (இரண்டாம் பதிப்பு). பாரதி பாடல்கள் ஆய்வுப் பதிப்பு. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக் கழகம்.

விசுவநாதன். சீனி. (பதி.ஆ.). 13.04.2012 (முதல் பதிப்பு). காலவரிசையில் பாரதி பாடல்கள். சென்னை: சீனி. விசுவநாதன்.

விசுவநாதன். சீனி. 11.12.1987 (முதல்பதிப்பு). பாரதி நூல்கள் விவரக்கோவை. சென்னை: பாலாஜி புத்தக நிலையம்.

விசுவநாதன். சீனி. 1989 நவம்பர் (முதல் பதிப்பு). பாரதி நூல்கள்: பதிப்பு வரலாறு. சென்னை: சீனி. விசுவநாதன்.

விசுவநாதன். சீனி. 1996 டிசம்பர் 11 (முதல் பதிப்பு). மகாகவி பாரதி வரலாறு. சென்னை: சீனி. விசுவநாதன்.